Akaram / Aharam

# ஆற்றல்

## மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 6

## தரம் 5

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கு வதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சுட்டெண் :..................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |


| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

01ஆம் 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


01.






(1) (2) (3)

02.






(1) (2) (3)


3ஆம் 4ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

03.



(1) (2) (3)

04.




(1) (2) (3)

சுட்டெண் :..................................................

கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு எல்லாச் சொற்களுடனும் பொருந்துகின்ற விடையைத் தெரிவு செய்க.


05. பால்
வீடு
முலையூட்டி


(1)



(2)


(3)

06. பொழுதுபோக்கு
மின்சாரம்
அறிவு


(1)


(2)


(3)

பின்வரும் சொற்கூட்டங்களுள் ஒரு சொல் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

07. (1) ஆதவன் (2) அம்புலி (3) பகலவன் (4) சூரியன்

08. (1) ஆடு (2) மாடு (3) நாய் (4) கோழி

முதலில் தரப்பட்டுள்ள இருசொற்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை அவதானித்து அடுத்துவரும் சொல்லுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

09. குயில் - கூவும் எனின், மயில் - ........................................


(1) அகவும் (2) பாடும் (3) கூவும்


10. நெல் - நாற்று எனின், கமுகு - ........................................


(1) கன்று (2) குட்டி (3) தாவரம்

**பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

மாம்பழம், பப்பாசிப்பழம், அன்னாசி ஆகியவற்றின் நிறை தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இதனை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.




11. இங்கு நிறை கூடிய பழம் எது?

(1) மாம்பழம் (2) பப்பாசிப்பழம் (3) அன்னாசி

12. இங்கு நிறை குறைந்த பழம் எது?

(1) மாம்பழம் (2) பப்பாசிப்பழம் (3) அன்னாசி

பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிக.

13. (1) பிள்ளகள் வகுப்பறையில் இருந்து பாடம் படித்தார்கள்.

(2) பிள்ளைகள் வகுப்பறையில் இறுந்து பாடம் படித்தார்கள்.

(3) பிள்ளைகள் வகுப்பறையில் இருந்து பாடம் படித்தார்கள்.


14. (1) நான் புள்ளாங்குழலின் இசையைக் கேட்டேன்.

(2) நான் புல்லாங்குளலின் இசையைக் கேட்டேன்.

(3) நான் புல்லாங்குழலின் இசையைக் கேட்டேன்.

15. கீழே தரப்பட்டுள்ள A, B ஆகிய இரு உருக்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்களின் எண்ணிக்கை யாது?






(1) 2 (2) 3 (3) 4


சதுர வடிவக்கடதாசியானது படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நான்காக மடிக்கப்பட்ட பின்னர் துளையிடப்பட்டது. அதனை விரிக்கும் போது தோன்றும் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

16.



(1) (2) (3)


17.



(1) (2) (3)


கீழே தரப்பட்டுள்ள கோலங்களை இனங்கண்டு ? இடப்பட்டுள்ள இடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

18.




(1) 24 (2) 22 (3) 36

19.





(1) 7 (2) 5 (3) 9

20. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றினுள் 2 கறுப்பு நிறப் பேனைகளும் 2 நீல நிறப்பேனைகளும் உள்ளன. பெட்டியிலிருந்து ஒரு நீலநிறப் பேனையைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியிலிருந்து எடுக்கவேண்டிய பேனைகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை யாது?

(1) 2 பேனைகள் (2) 3 பேனைகள் (3) 4 பேனைகள்.

தாவர உணவு , மாமிச உணவு ஆகிய இரண்டையும் உண்பவை தொடர்பான தொடர்பைப் பின்வரும் உருவானது காட்டுகின்றது. இதனைக்கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




21. ஆங்கில எழுத்து X இனால் குறிப்பதற்குப் பொருத்தமான பிராணி எது?
    (1) முயல் (2) சிங்கம் (3) நாய்

22. ஆங்கில எழுத்து Z இனால் குறிப்பதற்குப் பொருத்தமான பிராணி எது?
    (1) காகம் (2) நரி (3) மான்

23. நடந்து சென்றுகொண்டிருந்த ஒருவரின் இடது கைப்பக்கம் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தது எனின் அவர் சென்ற திசைக்கு எதிர்த்திசை எது?
    (1) தெற்கு (2) மேற்கு (3) வடக்கு


24. ஏழு பேர் தமக்கிடையே வாழ்த்து மடல்களைப் பரிமாறிக்கொண்டனர் எனில் அவர்கள் அனைவரும் பரிமாறிக்கொண்ட வாழ்த்து மடல்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    (1) 42 (2) 30 (3) 56


25. 4 ஆலும் 5 ஆலும் மீதியின்றி வகுபடக்கூடிய 25 இற்கும் 75 இற்கும் இடையிலுள்ள எண்கள் எத்தனை?
    (1) 2 (2) 3 (3) 4

26. புத்தகம் ஒன்றின் 15 ஆம் பக்கத்தில் இருந்து 20 ஆம் பக்கம் வரையுள்ள தாள்கள் கிழிந்து விட்டன. ஆகவே கிழிந்த தாள்களின் எண்ணிக்கை யாது?
    (1) 3 (2) 4 (3) 5

27. எட்டு விளிம்புகளையும் ஐந்து உச்சிகளையும் கொண்ட திண்ம வடிவம் எது?
    (1) கனவுரு (2) சதுரடிக்கூம்பகம் (3) நான்முகி


28. கீழே தரப்பட்டுள்ள சதுரமுகியைப் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளிக்கோடு வழியே வெட்டும்போது தோன்றும் புதிய முகத்தின் வடிவத்தை தெரிவுசெய்க.





(1) (2) (3)

29. அருகே காட்டப்பட்டுள்ள உருவானது செங்கற்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் முறையைக் காட்டுகின்றது. இவ்வுருவில் காணப்படும் செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 24 (2) 16 (3) 12

30. கீழே தரப்பட்டுள்ள கணிதச் செய்கையில் கூடுகளுள் வரவேண்டிய குறியீடுகளை தெரிவு செய்க.

8 ☐ 4 ☐ 7 = 19

(1) ( + , x ) (2) ( + , ÷ ) (3) ( + , + )

31. அண்ணாவினதும் தம்பியினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 25 வருடங்களாகும். அண்ணா தம்பியை விட 3 வருடங்கள் மூத்தவன் எனில் தம்பியின் வயது யாது?

(1) 15 (2) 14 (3) 11

கீழே தரப்பட்டுள்ள பிரசினங்களில் உள்ள ஒவ்வொரு ஆங்கில எழுத்திற்கும் 10 இற்கும் குறைந்த பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்குக.

$$\begin{array}{r} T\ M\ X \\ +\ T\ M\ X \\ \hline 2\ 8\ 6 \\ \hline \end{array} \qquad \begin{array}{r} S\ T\ Y \\ -\ T\ X\ M \\ \hline 3\ 7\ 8 \\ \hline \end{array} \qquad \begin{array}{r} S\ T\ Y \\ +\ T\ X\ M \\ \hline 6\ 4\ 6 \\ \hline \end{array}$$

32. ஆங்கில எழுத்து **T** இன் பெறுமானம் யாது?

(1) 3 (2) 1 (3) 2

33. ஆங்கில எழுத்து **Y** இன் பெறுமானம் யாது?

(1) 2 (2) 4 (3) 3

34. நிமலன் தனது கையில் இருக்கும் புகைப்படத்தைப் பார்த்து பின்வருமாறு கூறினான். ''இப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் மகனின் அண்ணா ஆவார்.'' எனின் நிமலனின் கையில் உள்ள புகைப்படத்தில் உள்ளவர் யார்?

(1) நிமலனின் தந்தை (2) நிமலனின் தங்கை (3) நிமலன்


35. 2020 ஆம் ஆண்டு லீப்வருடமாகும். இவ்வருடத்தின் மாசி மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை ஆகும். இம்மாதத்தில் உள்ள சனிக்கிழமைகள் எத்தனை?

(1) 3 (2) 4 (3) 5

36. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 1 பயன்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 11 (2) 12 (3) 13

கீழே சதுரமுகி ஒன்றின் மூன்று நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




37. ஆங்கில எழுத்து **A** இற்கு எதிரே இருக்கும் முகத்தில் உள்ள எழுத்து எது?

(1) B (2) E (3) F

38. ஆங்கில எழுத்து **E** இற்கு எதிரே இருக்கும் முகத்தில் உள்ள எழுத்து எது?

(1) F (2) B (3) C

39. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்,

- நான்காம் இலக்கம் முதலாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.
- மூன்றாம் இலக்கம் இரண்டாம் இலக்கத்தின் மூன்று மடங்காகும்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

(1) 3269 (2) 9623 (3) 6932

40. எமது விளையாட்டுக் குழுவில் உள்ள அனைவரும் உயரமானவர்கள். விமல் உயரமானவன். ஆகவே விமல் எமது விளையாட்டுக்குழுவைச் சேர்ந்தவன் என்னும் கூற்று.

(1) சரியானது (2) பிழையானது (3) சரியாகக் கூறமுடியாது

# ஆற்றல்

# மாதிரிப் பரீட்சை - 2021

## தொடர் - 6

**தரம் 5**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்

## வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

**சுட்டெண்** :................................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்:**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் உள்ள **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத் தாளிலேயே** தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.**

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | |
| **பிரதம பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப்புள்ளிகள் சரியாகும். | |

தயாரிப்பு ஆசிரியர் **திரு.ப.சந்திரமோகன்**

01. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப்பந்து போல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக்கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் கண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்கக் கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

(1) விடியலை அறிவிப்பவை எவை? ...........................................................................

(2) சூழலை இனிமையாக்குவது எது? ...........................................................................

(3) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(i) சூரியன் ........................................ (ii) பறவைகளின் ...............................................

(4) அடுக்குமொழி ஒன்று எழுதுக. ...........................................................................

(5) நிகழ்காலப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக. ...........................................................

(6) அஃறிணைப் படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ...........................................

**02. பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(1) அரசன் , மந்திரி , அரசி , தம்பி , தங்கை

(2) தேவன் , தம்பி , தங்கை , நடிகன் , நடிகை

**03. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

(1) இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்

(2) நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் யாவர்

**04. பின்வரும் பந்தியில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| பாரதியார் | தன்மை | காப்பியங்கள் | சீவகசிந்தாமணி |

தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, 1. ................................. போன்ற இனிய 2. ............................. உள்ளன. இவை மிகவும் பழைமையானவை. படிக்கும்போது உள்ளத்தை உருக்கும் 3. .................................... உடையவை. தற்காலத்திலேயே 4. ..................................... கவிமணி போன்ற கவிஞர்கள் இனிய எளிய நடையில் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

05. பின்வரும் பந்தியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடத்திற்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து கோடிடுக.

ஓர் அடர்ந்த காட்டில்  வாழ்ந்து வந்தது. அதனுடன்  நண்பனாக இருந்தது. ஒரு நாள் அவை காட்டு வழியே நடந்து செல்லும்போது சில  கண்டன.

(1) (i) ஆந்தைக்கு (ii) ஓர் ஆந்தை (iii) ஆந்தையை

(2) (i) ஒரு நரி (ii) நரியின் (iii) நரிகளோடு

(3) (i) எறும்புகளோடு (ii) எறும்புகளால் (iii) எறும்புகளைக்

**06. பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக எதுழுக.**

(1) பூனை பாலைக் குடித்தது.
பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது.

..............................................................................................................

**07. பின்வரும் சொற்களைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமையுங்கள்.**

(1) வேண்டாம் / போக்கெல்லாம் / மனம் / போன / போக

..............................................................................................................

(2) பாதுகாத்தல் / எமது / நோய் / உடலை / வராமல் / நாம் / வேண்டும்.

..............................................................................................................

**08. பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.**

(1) சிறு துளி பெரு வெள்ளம்.

..............................................................................................................

(2) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

..............................................................................................................

**09. பின்வரும் வினாக்களுக்கு இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.**

(1) பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ......................... ( விளையாடினார்கள் , விளையாடினார் )

(2) அரசன் தஞ்சம் புகுந்த புறாவைக் ......................... (காப்பாற்றினார்கள், காப்பாற்றினான்)

10. கீழ்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(1) துவன்ன .................................... (2) அத்த சோதன்ன ....................................

**11. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை எழுதுக.**

(1) வாழைக்காய் .................................... (2) திராட்சை ............................................

**12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப்பதத்தை எழுதுக.**

(1) Blakcboard ................................. (2) Horse ......................................................

**13. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

(1) வெண்கட்டி .................................. (2) கத்தரிக்காய் .......................................

**14. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(01) எழுத்துக்களில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கங்களில் எழுதுக.

நாற்பதாயிரத்து நானூற்று மூன்று :- ..............................................................................

(02)

| | |
|---|---|
| 9 | 5 |
| 8 | 1 |

இவ்விலக்கங்களைக்கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.

..............................................................................................................

(03) கீழே தரப்பட்டுள்ள உரோமன் எண்களுக்குரிய இந்து அராபிய எண்களை எழுதுக.

(i) ix................................. (ii) xiv .................................

(04) பின்வரும் பின்னங்களுக்குரிய சமவலுப் பின்னங்களை எழுதுக.

(i) $\frac{1}{2}$ = ................ (ii) $\frac{1}{3}$ = ................

(05) பழத்தோட்டம் ஒன்றில் இருந்து 2954 மாம்பழங்களும் 3270 ரம்புட்டான் பழங்களும் 1439 கொய்யாப் பழங்களும் பறிக்கப்பட்டன. பறிக்கப்பட்ட மொத்தப் பழங்கள் எத்தனை?

.....................................................................................................................................

(06) ரூ.770 பணத்தினை வைத்திருக்கும் ஒருவர் ஒரு மாம்பழம் ரூ.7 வீதம் எத்தனை மாம்பழங்களை வாங்கமுடியும்?

.....................................................................................................................................

(07) நீர்த்தாங்கி ஒன்றில் 250$\ell$ நீர் உள்ளது. அதனுள் மேலும் 175$\ell$ 850m$\ell$ நீர் ஊற்றப்பட்டது. தற்போது தாங்கியில் உள்ள நீரின் அளவு யாது?

.....................................................................................................................................


(08) கயிறு ஒன்று இரு துண்டுகளாக வெட்டப்பட்டது. அதில் ஒரு துண்டின் நீளம் 2m 35cm ஆகும். மற்றைய துண்டின் நீளம் 3m 65cm எனின் ஆரம்பத்திலிருந்த கயிற்றின் நீளம் யாது?

..............................................................................................................................

(09) 450 புத்தகங்களை ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பொதிகள் தயாரிக்க முடியும்?

..............................................................................................................................

(10) வியாபாரி ஒருவர் ஐந்து நாட்களில் விற்ற பாலின் அளவு வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதனை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.




(i) திங்கள் கிழமை விற்ற பாலின் அளவு 30 லீற்றர் ஆகும். அதனை வரைபில் காட்டுக.

(ii) குறைவான பால் விற்கப்பட்ட நாள் எது?

..............................................................................................................................

(11) ஒரு மாம்பழத்தின் விலை ரூ. 25.00 ஆகும். ஓர் அப்பிள் பழத்தின் விலை ரூ. 40 ஆகும். மாம்பழம், அப்பிள் பழம் ஆகியவற்றில் ஒரு குறித்த தொகையை வாங்குவதற்குச் செலவிட்ட பணம் ரூ.205.00 ஆகும். எனவே வாங்கியிருக்கக்கூடிய மாம்பழங்களின் ஆகக் கூடிய தொகை யாது?

..............................................................................................................................

(12)


| | |
|---|---|
| 30 | 20 |
| 36 | |
| 24 | 18 |

கூட்டுக்குள் தரப்பட்டுள்ள எண்களில் நான்கின் மடங்குகளைத் தெரிவு செய்து எழுதுக.

..............................................................................................................................

(13) விழா ஒன்று பி.ப 2.35 இற்கு ஆரம்பித்து பி.ப 4.45 இற்கு நிறைவடைந்தது. விழா நடைபெற்ற நேரம் எவ்வளவு?

.......................... மணித்தியாலம் ............................. நிமிடம்

(14) 

இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................................

(15) தரப்பட்டுள்ள வடிவங்களுக்கு ஒவ்வொரு சமச்சீர் கோடுகள் வரைக.



**15. பின்வரும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. ஒருவர் விரும்பக்கூடிய செயற்பாடு எது?
    (1) பட்டப் பெயர் சொல்லி அழைத்தல்.
    (2) பொய் பேசுதல்
    (3) ஆரோக்கியமாக வாழ்தல்

02. மூங்கிலை விரும்பியுண்ணும் பிராணி எது?
    (1) பன்டா (2) யானை (3) மான்


03. அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களுக்கிடையே வாழும் பிராணி எது?
    (1) சிலந்தி (2) இராமபாணம் (3) கரப்பான்

04. குந்துகாலி என அழைக்கப்படும் பறவை எது?
    (1) காகம் (2) புளுணி (3) மைனா

05. அழுக்குகளை உண்டு சூழலை சுத்தம் செய்யும் பிராணி எது?
    (1) கறையான் (2) வெளவால் (3) காகம்

06. பின்வரும் பிராணிகளுள் நீண்ட நாட்கள் உயிர் வாழக்கூடிய பிராணி எது?
    (1) எருமை (2) யானை (3) ஆமை

07 இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
    (1) காய்ச்சல் (2) குருதிச் சோகை (3) கண்டமாலை

08. 

பொலிசாரின் இச்சைகையானது குறித்து நிற்பது.
    (1) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
    (2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துக.
    (3) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துக.

09. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
    (1) வலைப்பந்து (2) கபடி (3) கரப்பந்து

10. திஸ்ஸ வாவியினைக் கட்டுவித்த மன்னன்.
    (1) தேவநம்பியதீசன் (2) மகாசேனன் (3) பராக்கிரமபாகு


11. தேசிய இலச்சினையிலுள்ள வாளேந்திய சிங்கம் குறித்து நிற்பது.
(1) நாடும் கட்டுப்பாடான மக்களும். (2) உலக நிலைப்பாடு
(3) சௌபாக்கியம்

12. 
படத்தில் காட்டப்பட்டுள்ள பிராணி எது?
(1) பிளாற்றிப்பசு (2) எறும்புண்ணி
(3) கபறக்கொய்யா

13. மாத்தளை மாவட்டம் அமைந்துள்ள மாகாணம் எது?
(1) மத்திய மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) ஊவா மாகாணம்

14. தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?
(1) சிவப்பு (2) பச்சை (3) மஞ்சள்

15. தரமான தேயிலையை நீரில் இட்டால் தோன்றும் நிறம்.
(1) கபிலம் (2) கருங்கபிலம் (3) இளமஞ்சள்

16.



படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரே அளவான மூன்று குவளைகளில் ஒன்றில் சாதாரண நீரையும், ஒன்றில் சுடு நீரையும் மற்றயதில் குளிர் நீரையும் இட்டு அவற்றில் ஒரேயளவான பனிக்கட்டிகளை இடும்போது அவை கரைந்த ஒழுங்குமுறையைச் சரியாகக் காட்டுவது.

(1) A - B - C (2) A - C - B (3) C - A - B

17. 
இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது யாது?
(1) கவனமாகக் கையாளுங்கள் (2) இப்பக்கம் மேலே
(3) நொருங்கக்கூடியது

18. பின்வருவனவற்றுள் பானம் தயாரிக்கப் பயன்படும் வித்து எது?
(1) தேசி (2) கோப்பி (3) தேயிலை

19. பாதசாரிகள் வீதியால் செல்லும்போது எப்போதும்
(1) வலது பக்கமாகச் செல்லுதல் வேண்டும் (2) இடது பக்கமாகச் செல்லுதல் வேண்டும்
(3) கூட்டமாகச் செல்லுதல் வேண்டும்

20. காந்தம் ஒன்றினால் கவரப்படும் பொருள்
(1) இறப்பர் (2) அலுமினியம் (3) இரும்பாணி

21. வானத்தில் இயற்கையாகக் காணப்படும் பொருள் எது?
(1) சந்திரன் (2) விமானம் (3) செய்மதி

22. வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஒவ்வொருவரும் தனித்தனியாக பயன்படுத்தும் பாவனைப் பொருள் அல்லாதது
(1) கைக்குட்டை (2) கண்ணாடி (3) பற்தூரிகை

23. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம் எது?
(1) கொழும்பு (2) மட்டக்களப்பு (3) திருகோணமலை

24. யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கும் பிரதான வீதியின் பெயர் யாது?
(1) A9 (2) A32 (3) A1

25. பின்வருவனவற்றுள் வித்துக்களை நீக்கிய பின்னர் சமைக்கப்படுவது எது?
(1) பயற்றை (2) வெண்டி (3) பாகல்

26. பின்வருவனவற்றுள் அச்சு ஊடகம் எது?
(1) தொலைக்காட்சி (2) வானொலி (3) பத்திரிகை

27. செங்கடகல என அழைக்கப்படும் நகரம் எது?
(1) திருகோணமலை (2) கண்டி (3) கொழும்பு

28. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிகச்சிறிய கோள் எது?
(1) புதன் (2) வியாழன் (3) புவி

29. காசுக்கட்டளையைப் பணமாக மாற்றிக்கொள்வதற்காகச் செல்லவேண்டிய இடம் எது?
(1) வங்கி (2) தபாலகம் (3) பிரதேச செயலகம்

30. 
இப்படத்தில் காணப்படுபவர்
(1) இலங்கையின் முதலாவது பிதமர்
(2) இலங்கையின் முதலாவது சனாதிபதி
(3) இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி

**16. 'வாசிப்பதால் நாம் அடையும் பயன்கள்'** என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
( ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். )

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................